
# எங்கள் திருவுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர். சுப்ரமணியம் திருநாவுக்கரசு
எம்முடன் 17.05.1954
எமைவிட்டு 01.08.1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்திரு. திருநாவுக்கரசு
# அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

## இளமைப்பருவம்

*அலைகடல் ஏறியும் பசுந்தீவாம் நெடுந்தீவின் இயற்கைத்துறை என அழைக்கப்படும் பெரியதுறையில் உயர்திரு சுப்பிரமணியம் நவரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனாக 17.05.1954 இல் பிறந்தார்.*

*ஆரம்பக் கல்வியை நெடுந்தவு மேற்கு சைவப்பிரகாசாவிலும் உயர்கல்வியை நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும் பின்னர் யாழ் இந்துக் கல்லூரியிலும் நிறைவு படுத்திக்கொண்டார்.*

*அதைத்தொடர்ந்து அம்பாறை விவசாயத்தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் விவசாயத்துறையில் தேர்ச்சி பெற்று அதற்கான பட்டமும் பெற்றார். பின்னர் ஆசிரியத் துறையில் தன்னை இணைத்துக் கொண்டார். ஆசிரியப் பணியில் விசேடமாக ஆங்கிலம், கணிதம், தமிழ், விவசாயம் ஆகிய துறைகளில் அதிகூடிய அக்கறையோடு மாணவர்களுக்கு கல்வி புகட்டினார். அதன்பின்னர் பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் இணைந்து விவசாயத்துறையில் பயிற்றப் பட்ட ஆசிரியரானார். இவ் ஆசிரியப் பணி புரிந்து கொண்டே கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.*

## ஆசிரியராக, சமூக சேவகராக!

*மாணவப் பருவத்திலிருந்தே மிகுந்த தேர்ச்சியும் திறமையும் இயல்பாகவே காணப்பட்ட திரு அவர்களிடம் பிறருக்கு உதவும் எண்ணம் எப்போதும் மேலோங்கியே காணப்படும். இவர் உயர்கல்வி கற்கும் மாணவனாய் இருந்த காலத்தில் சுற்றுச்சூழலில் வதியும் வசதியற்ற ஏழை மாணவர்கள் பலருக்கு எந்த வித பிரதி உபகாரமுமின்றி அவர்களை அழைத்து கல்வியைப் புகட்டி அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டினார்.*

*நெடுந்தீவின் பசுமையைப் பேணிப்பாதுகாக்க மரம் நாட்டும் இயக்கத்தை தனியொருவனாக ஆரம்பித்து பின் உற்ற நண்பர்களையும் இணைத்துக் கொண்டு தீவடங்கிலும் மரம்நாட்டும் இயக்கத்தை பல வழிகளில் மக்களுக்கு பயன்தரும் இயக்கமாக உருவாக்கி அதனால் இன்றும்பல மக்கள் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள்.*

*நெடுந்தீவு மேற்கிலுள்ள சனசமூக நிலைய நூல் நிலையங்கள் பலவற்றை பொறுப்பேற்று திறம்பட நிர்வகித்து அனைவரும் பயன்பெறும் வண்ணமும் இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.*

*நெழுவினி, சித்திவினாயகர் ஆலய திருத்தொண்டுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு சமயத்தொண்டுகளிலும் ஆலயத்தின் வளர்ச்சியிலும் பங்கேற்றதுடன்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இளைய தலைமுறையினரையும் ஈடுபடச்செய்தார். ஆலயத் தீர்த்தத் திருவிழாவில் இவரின் பங்கு எப்போதும் உன்னதமானது. கனடா வந்த பின்னரும் நெழுவினியானின் திருப்பணியை கடைசி வரை மறக்காது தனக்குக் கிடைத்த சிறு வருமானத்திலும் திருப்பணிக்காக ஒரு தொகையை சேமித்துக் கொண்டார்.

சுகயீனமுற்று கொழும்பில் சிகிச்சைக்காக தங்கியிருந்த வேளையிலும் கொழும்பில் வாழும் நெடுந்தீவு மக்களை ஒன்றிணைத்து தீவின் அவசர மருத்துவ தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட அமைப்பில் முக்கிய உறுப்பினராக பணியாற்றியதுடன் கணிசமான நிதியையும் திரட்டுவதற்கு உறுதுணையாக இருந்தார்.

புதிய குடிவரவாளனாக வந்த சிறிது காலத்திற்குள்ளேயே கனடா வாழ் நெடுந்தீவு மக்களுடன் இடைவிடாது தொடர்பு கொண்டு தீவின் உண்மை நிலையைத்தெளிவு படுத்தி அதன் அவசியத் தேவைகள் எது என்று பிரக்ஞையை உருவாக்கி அதன் தொடர்ச்சியாக நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்துடன் இணைந்து முக்கிய பொறுப்பை ஏற்றுக் கொண்டு தன் சுகயீனத்தையும் பொறுப்படுத்தாது செயலாற்றினார். நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தை முன்னேற்றகரமானதாகவும் நீண்ட நோக்கில் மக்கள் பயன்பெறத்தக்க வகையில் நல்ல பல திட்டங்களையும் உருவாக்கி இறுதிக் காலம் வரைக்கும் நெடுநதீவின் முன்னேற்றம் பற்றிய கனவுடனேயே திருவின் ஆத்மா எங்களைவிட்டுப் பிரிந்து விட்டது.

திருவின் அபிலாசைகளை முன்னெடுத்துச் செல்வதே நண்பர்களாகிய நாம் அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நண்பர்களுடனும் திரு.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிசை வெண்பா

எங்கேநீர் வாழ்ந்தாலும் ஈன்ற பதியதனை
தங்கமதாய்ப் போற்றும் திருநாவே மங்களமாய்
தப்பா(து) அறம்செய்தே ஈசன்தாள் ஏகினீரே
எப்போது காண்போம் இனி

## ஆசிரியப்பா

அன்பின் நண்பா அறிவின் அர்த்தம்
இன்பம் என்றும் இல்லார் வாழ்வில்
கல்வியை ஏற்றிப் பகிர்தல் என்றும்
நல்ல அறத்தைப் பிறந்த மண்ணில்
ஏழை மாணவர்க் கீந்தீர் இனிதே!
வாழை போலப் பயனை நல்கினீர்
நாளை நமக்கு என்று எதையும்
பேழை தன்னில் பூட்ட இல்லை
எனினும் நீவிர் பிறந்த பதியில்
இனிதாய் நட்ட மரநாட்டு விழாவில்
ஓங்கி வளர்ந்த மரங்கள் கூறும்
தங்க திருநா வுக்கரசு தமக்கு
அளித்த சேவை என்றும் ஒளியில்
ஒளிரும் ஓங்கிக் கரத்தை என்றும்
காட்டி வாழ்க அரசே! வளர்க,
நாட்டி எம்மை வளர்த்தாய் என்கும்
கற்றாய் கல்வியை கசடறத் தானே
உற்றவர் மற்றவர் புகழ வாழ்ந்தீர்
தமிழிலி புலமை படைத்தாய் திருவே

இமிழும் கடலால் சூழ்ந்த தீவில்
மொழிகள் மூன்று அறிந்த நீவிர்
வழிகள் காட்டத் தவறிய தில்லை
ஆரம்பக் கல்வி கற்றீர் பிறந்த
நீரால் சூழ்ந்த நெடுந்தீ வதனில்
தொடர்ந்தீர் கல்வி யாழிலே இந்துவில்
படரும் கொடிபோல் அகன்ற கல்வியை
அம்பாறை பலாலி ஆகிய இடங்களில்
நம்மவர் போற்றும் ஆசிரி யத்தவம்
எம்மினம் வேண்டும் விவசாயக் கல்வி
இட்ட முடனே கற்றீர், மேலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டக் கல்லூரி தன்னிலும் சேர்ந்து
திட்டமாய்க் கற்றீர்
நண்பஉடம் இழப்பு நமக்கெல்லாம் இழப்பு
சோதரன் பிரிவு சோதரர்க் இழப்பு
நன்மா ணவனாய் நல்லா சிரியினாய்
வாழ்ந்தீர் உம்மை நாமொன்றும் மறவோம்
எல்லோர் இதயத் ஒளியாய் வாழ்ந்த
திருநா உம்மை இறையாம் ஒளியில்
திருவாய் இணைத்த இறையை வாழ்த்தும்,
நிறையை வாழ்த்தும் திருவும் திருவாய்
இறையடி சேர்ந்தே ஈற்றுப் பொருளாம்
வீடுபே றடைந்தான் இறைதாள் சேர்ந்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பா...!

யாரை இழந்தோம்....?
இன்றைய நாளை
நாளைய பொழுதைப்போல்
உனது மரணம்.
ஏற்றுக்கொள்ளென அழுத்தும்
நிச்சயத்தை
மீறி எழுந்தது நினைவு
நீயோ சிரித்தவாறு...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவிரு முகங்கள் போற்றி
முகம் பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி

யாவையும் படைப்பாய் போற்றி
யாவையும் துடைப்பாய் போற்றி
யாவையும் ஆனாய் போற்றி
யாவையும் அல்லாய் போற்றி
யாவையும் அறிந்தாய் போற்றி
யாவையும் மறந்தாய் போற்றி
யாவையும் புணர்ந்தாய் போற்றி
யாவையும் பிரிந்தாய் போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org